பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 11 2026 WEDNESDAY - 6 30 PM

வணக்கம் - மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அக்னிவீரர்களின் பணிக்காலத்தை நான்காண்டுகளிலிருந்து ஆறு ஆண்டுகளாக நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- முழுமையாக பயோ எத்தனால் பயன்பாட்டில் இயங்கும் கார், வரும் 26ஆம் தேதி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.
- உச்சநீதிமன்றத்தின் கிளையை சென்னையில் ஏற்படுத்த வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இளையோர் ஒலிம்பிக் போட்டிகளின் பேட்மிண்டன் பிரிவில் இந்தியாவின் Tanvi Patri அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

புள்ளியியல் துறையை நவீனமயமாக்குவதற்கு வகை செய்யும் திட்டத்தை 4 ஆயிரத்து 371 கோடி ரூபாய் செலவில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், நடப்பு நிதியாண்டு முதல் 2031ஆம் ஆண்டு வரை இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

எரிசக்தி சேமிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கு, மானிய உதவி வழங்க வகைசெய்யும் 14 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றங்களை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கவும் அமைச்சரவை ஒப்பதல் வழங்கியதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

அக்னிவீரர்களின் பணிக்காலத்தை நான்காண்டுகளிலிருந்து ஆறு ஆண்டுகளாக நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கிடையே, மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பாதுகாப்புத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மின்சார வாகனங்களின் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மின்சார வாகன கட்டமைப்பு தொடர்பான விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

மின்னணு வாகன சந்தை விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

100 சதவீத பயோ எத்தனால் பயன்பாட்டில் இயங்கும் Tayota Innova வாகனத்தை வரும் 26ஆம் தேதி தாம் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் திரு. நிதின் கட்கரி கூறினார்.

>>>>>><<<<<<

உச்சநீதிமன்ற கிளையை சென்னையில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

1980-ஆம் ஆண்டு முதல் இந்த கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருவதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உச்சநீதிமன்ற கிளையை சென்னையில் ஏற்படுத்துவது, கூட்டாட்சி தத்துவத்தை எடுத்துரைப்பதாக இருக்கும் என்றும் திரு. விஜய் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

சிறைத்துறையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. நிர்மல்குமார் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்து பரிந்துரைப்பதற்காக உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

காவலர்களுக்கும், கைதிகளுக்கும் இடையே மோதல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. நிர்மல்குமார் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பத்திரப் பதிவு துறையில் கடந்த மாதம் ஆயிரத்து 950 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் தமது துறை அலுவலர்களின் பணித்திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

கடந்த நிதியாண்டில் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், இது 147 கோடி ரூபாய் அதிகம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கால்நடை பராமரிப்புத்துறை உதவியாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திருமதி. கமலி தெரிவித்துள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கால்நடைகளை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

>>>>>><<<<<<

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வர தேவையான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், மின்னணு வேளாண் சந்தை திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, வணிகர்கள் கொள்முதல் செய்ய முன்வராததை சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு மத்திய அரசு கொண்டுவந்துள்ள இந்த திட்டத்தை முழுமையாக செயல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte - வி ஆர் துரை - 28 Sec.)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

தருமபுரி அருகே 10 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகம் திறக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக பட்டாசு வெடிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தீயணைப்புத்துறை சார்பில் நடத்தப்பட்டது.

>>>>>><<<<<<

திருப்பூரில் புதிய ஆதார் சேவை மையத்தை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஆனந்தி திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. பிரதாப் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, 12 மீட்டருக்கும் கூடுதல் நீளமுள்ள பயணியர் மற்றும் சரக்கு வாகனங்கள் மலைச் சாலைகளில் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கனமழை பாதிப்பு காரணமாக, நீலகிரி மலை ரயில் போக்குவரத்து மேலும் 3 நாட்களுக்கு ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இளையோர் ஒலிம்பிக் போட்டிகளின் பேட்மிண்டன் பிரிவில் இந்தியாவின் Tanvi Patri அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

செனகலின் Dakar-ல் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-17, 21-13 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Kungkaew Kakanik-ஐ வென்றார்.

நீச்சல் பிரிவில் இந்தியாவின் Dhinidhi Desinghu இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

தோஹாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் 2வது இடத்தில் உள்ளது.

>>>>>><<<<<<

கொரிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anmol Kharb காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-19, 21-18 என்ற செட்கணக்கில் கனடாவின் Rachel Chan-ஐ வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்று Tanvi Sharma-வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>>><<<<<<

உலக பேட்மிண்டன் இறுதிச்சுற்று போட்டியில் பங்கேற்க இந்தியாவின் பி.வி. சிந்து தகுதி பெற்றுள்ளார்.

>>>>>><<<<<<

நியூஸிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா, ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆக்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த நியூஸிலாந்து, தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கி, 40 புள்ளி 2 ஓவரில் 185 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக Tim Seifert 38 ரன எடுத்தார்.

Arshdeet Singh அபாரமாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

186 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு, பின்னர் இந்தியா பேட் செய்த போது, இரண்டு முறை மழை குறுக்கிட்டதன் காரணமாக, வெற்றி இலக்கு Duckworth-Lewis முறைப்படி 143 ரன்னாக குறைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பேட் செய்த இந்தியா 22 புள்ளி 4 ஓவரில் 5 விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் 2வது ஆட்டம், வரும் சனிக்கிழமை வெலிங்டனில் நடைபெறுகிறது.

>>>>>>END<<<<<<